22.01.2024 . HMOP. 238/2022

சாட்சி : PW 1 kumar

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை :**

எதிர்மனுதாரர் எனது மனைவிதான். எங்களுக்குள் 31.08.2005 தேதியில் பெற்றோர் உற்றார் சம்மதத்துடன் திருமணம் நடந்தது. திருமணத்தின் போது எதிர்மனுதாரருக்கு நகைகள் பண்டப்பாத்திரங்கள் கொடுத்து தான் திருமணம் செய்தார்கள். எதிர்மனுதாரரின் நகைகள் மற்றும் சீர் சாமான்கள் அனைத்தும் என்னிடம் தான் உள்ளன என்றால் பாதியை வாங்கிச் சென்றுவிட்டார்கள். நிரூபணவாக்குமூலத்தை படித்து பார்த்துதான் கையெழுத்து போட்டேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் சரியானவை. நகையை வாங்கிச்சென்று விட்டதாக மனுவிலும் நிரூபணவாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். தற்போது வரை நாங்கள் இருவரும் ஒரே வீட்டில் தான் இருக்கிறோம். எனக்கு இரண்டு மகன்கள். முதல் மகன் ரோகித் 17 வயது. இரண்டாவது மகன் சுஜித் 15 வயது. நான் திருமணத்திற்கு முன்பு மும்பையில் இருந்தேன். திருமணத்திற்கு பிறகு நாங்கள் இருவரும் 5 ஆண்டுகள் மும்பையில் குடும்பம் நடத்தினோம். முதல் மகன் டிசம்பர் 6 2006 ல் பிறந்தார். இரண்டாவது மகன் 2009 மார்ச் 12 ல் பிறந்தார். மேற்படி இரண்டு பிள்ளைகளையும் படிக்கவைத்து ஆளாக்கியது எதிர்மனுதாரர் தான் என்றால் நான் தான் செலவு செய்தேன். 1 வது மகன் சிவகங்கை கீழக்கண்டனி அரசு பள்ளியில் 12 ம் வகுப்பு படித்து வருகிறார். 2 வது மகன் அரியக்குடி அரசுப்பள்ளியில் 10 ம் வகுப்பு படித்து வருகிறார். எதிர்மனுதாரர் திருமணம் ஆனதில் இருந்து தவறாக நடந்தாக கூறியுள்ளளேன் ஆனால் எந்த தேதியில் என்ற தவறு நடந்தது என்று கூறவில்லை என்றால் சரிதான். 2014ல் எதிர்மனுதாரரின் நடவடிக்கையில் மாற்றம் ஏற்றபட்டதை கண்டித்தேன் அது என்ன மாற்றம் என்றால் போன் வந்தால் வெளியே போய் பேசுவார் அதனால் கண்டித்தேன். நான் சொன்னது போல மும்பையில் இருவரும் 5 ஆண்டுகள் குடித்தனம் நடத்த வில்லை என்றால் முதல் குழந்தை பிறக்கும்போது வலைகாப்பிற்காக ஊருக்கு வந்தவர் அதன் பிறகு மும்பை வரவில்லை. அதிலிருந்து எதிர்மனுதாரர் எனது பெற்றோர் மற்றும் சகோதர சகோதரிகளுடன் கூட்டுக்குடும்பமாகத் தான் இருந்து வந்தார். கடந்த 4 ஆண்டுகளாக தான மனுவில் கண்ட முகவரியில் தனிக்குடுத்தனமாக இருந்து வருகிறோம். முதல் குழந்தை பிறந்து 6 மாதத்திலேயே சந்தேகப்புத்தி அதிகமாயி மன நிலை பாதிக்கப்பட்டு திருச்சியில் உள்ள

மருத்துவர் ரசீத் என்ற மனநல மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சையில் இருந்தேன் என்றால் ஆல்ஹகால் பிரச்சனைக்காக சிகிச்சையில் இருந்தேன். நான் மேற்படி மருத்துவமனையில் மன நல சிகிச்கை தான் எடுத்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. டாக்டர் ரசீத் என்பவர் மனநல மருத்துவர் ஆவார். நான் எதிர்மனுதாரரின் நகைகளை வாங்கி வைத்துக்கொண்டு எங்கையும் போகக்கூடாது என்று சொல்லிவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. எந்த விசேசங்களுக்கும் நகைகளை குடுப்பதில்லை என்று சொன்னால் சரிதான். தற்போது நாங்கள் குடியிருக்கும் வீடு ஆதிதிராவிடர் என்ற முறையில் எனக்கு இலவசமாக கொடுத்தது. அந்த வீட்டில் பராமரிப்பு பணிகள் செய்து மேற்கொண்டு கட்டுமானங்களும் எதிர்மனுதாரர் செய்துள்ளார். ம.சா.ஆ. 4 கடிதத்தில் உள்ள சங்கதிகளுக்கும இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி கடிதத்திற்கு அடியில் எதிர்மனுதாரரின் கையெழுத்து இல்லை. விவகாரத்து மனுவிற்கு வலுசேர்க்கும் வகையில் கடிதத்தில் எந்த விசயங்களும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் வெளிநாட்டில் இருந்து அனுப்பிய பணத்தை எதிர்மனுதாரர் தான்தோன்டித்தனமாக செலவுச்செய்தார் என்றும் நல்ல கல்வியை பிள்ளைகளுக்கு கொடுக்கவில்லை என்றும் நான் கூறியிருக்கிறேன். குழந்தைகளை சரியாக படிக்க வைக்கவில்லை என்று மனுவிற்காக சொல்லுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரர் குழந்தைகளுக்கு நல்ல உணவு கொடுத்து நல்ல டியுசனில் சேர்த்து படிக்க வைத்துள்ளார் என்றால் சரிதான். அனுப்பிய பணத்திற்கு எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் வைத்து கணக்கு ஒப்படைத்து விட்டார். ஆனால் அன்று அன்று கணக்கு எழுதவில்லை. எனது தம்பிக்கும் மற்றும் குடும்பத்திற்கும் எனது ஆலோசனையில் பேரில் தான் எதிர்மனுதாரர் பணம் கொடுத்தார் என்றால் சரிதான். கடன் காரர்கள் யார் யார் வீட்டிற்கு வந்து கேட்டார்கள் என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை. 2014ம் ஆண்டிலும் சரி தற்போதும் சரி எதிர்மனுதாரர் போன் வந்தால் வெளியே சென்று தான் பேசுவார் அது எந்த தொலைபேசி எண் என்று தெரியாது. எங்கள் திருமணத்திற்கு பிறகு 2 முறை எதிர்மனுதாரர் தற்கொலைக்கு முயற்சி செய்தார். நான்தான் மது அருந்திவிட்டு எதிர்மனுதாரரை கொடுமை படுத்தி அதை வீடியோ எடுத்து அவர்கள் பெற்றோருக்கு காண்பித்தேன் என்றால் திட்டியது மட்டுதான் உண்மை. நான் திட்டியதால் தான் எதிர்மனுதாரர் எறும்பு மருந்தை 2022 ல் கரைத்து குடித்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். அதனால் எதிர்மனுதாரரை காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்ல முயன்று பின்னர் போலீஸ் கேஸ் ஆகிவிடும் என்பதால் சரண்யா மருத்துவமனையில் சேர்தோம் என்றால் நேரடியாக சரண்யா மருத்துவமனையில் தான் சேர்த்தோம்.அவரது நகையை தராமல் கொடுமைப்படுத்தியதால் என்மீதும் எனது குடும்பத்தார்கள் மீதும

எதிர்மனுதாரர் புகார் கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி புகார் விசாரணையில் நகையை கொடுத்து விடுவதாக கூறியதன் பேரில் அந்த புகார் முடிக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். மேற்படி காவல்துறை நடவடிக்கையில் இருந்து தப்புவதற்காத்தான் எவ்வித அடிப்படையுமின்றி இந்த விவகாரத்து மனுவை தாக்கல் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரர் குழந்தைகளின் நலன் கருதி பொறுத்துக் கொண்டு பிள்ளைகளை வளர்த்து ஆளாக்கினார் என்று சொன்னால் சரியல்ல. எங்கள் வீட்டில் உள்ள அனைத்து வீட்டு உபயோக பொருள்களையும் நான் அனுப்பிய பணத்தில் வாங்கி தற்போது வீட்டில் உள்ளது என்று சொன்னால் சரிதான். விவகாரத்து கேட்பதற்குரிய எந்த காரணமும் மனுவில் துலக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் ஊருக்கு வரும்போது எதிர்மனுதாரர் வீட்டில் இருக்க கூடாது என்ற என்று 2 வது மகனிடம போனில் சொன்னேன் என்றால் வாய்தா முடிந்து நான் போகும் வரை வீட்டில் இருக்கக்கூடாது என்று தான் சொன்னேன். இதனால் பயந்து எதிர்மனதாரர் காரைக்குடி துனைகண்காணிப்பாளர் அலுவலக்தில் மனு கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. தற்போது வரை நான் எதிர்மனுதாரர் சமைக்கும் சாப்பாட்டை தான் சாப்பீட்டு வருகிறேன் என்ற சொன்னால் நான் ஹோட்டலில் தான் சாப்பிட்டு வருகிறேன். காலையில் எதிர்மனுதாரர் கொடுத்த உணவைதான் சாப்பிட்டேன் என்றால் பிரசிடண்ட் ஹோட்டலில் சாப்பிட்டேன். எனவே இந்த விவகாரத்து செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)- திரு.மு.வீரணன் M.A., L.L.M.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.